B 23/12/20 ASec

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் – கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் (நாகர்கோவில்) தலைமைக் காவலராகப் பணிபுரிந்து பணியிடையே காலமான திரு.C.நாகராஜன் என்பவரின் மகன் திரு.N.முத்துகுமார் என்பவருக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது – அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.-1) துறை, நாள் 23.01.2020-ற்கு விலக்களித்து தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை – ஆணை வெளியிடப்படுகிறது .

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (N) துறை

அரசாணை(3D) எண் . 13

நாள் 15.12.2020
சார்வரி, கார்த்திகை - 30
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (M) துறை, நாள் 01.08.2018.
2. இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககக் கடித ந.க.எண்.அ5/19658/2013, நாள் 07.11.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.-1) துறை, நாள் 23.01.2020.

*******

ஆணை :

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் (நாகர்கோவில்) தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.C.நாகராஜன் என்பவர் 20.02.2013 அன்று பணியிடையே காலமானதால், அவரது இளைய மகன் திரு.N.முத்துகுமார் தனக்கு கருணையடிப்படையில் பணி வழங்குமாறு கோரியிருந்ததாகவும், காலஞ்சென்ற அரசு ஊழியரின் மனைவி திருமதி.N.லதா 21.02.2015 அன்று காலமாகிவிட்டதாகவும், காலஞ்சென்ற அரசு ஊழியரின் மூத்த மகன் திரு.N.பாலு என்பவர் தமது இளைய சகோதரரான திரு.N.முத்துகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி நியமனம் வழங்குவதற்கு மறுப்பேதும் இல்லையெனத் தெரிவித்துள்ளதாகவும், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியரால் கருணையடிப்படையிலான பணி நியமனத்திற்கென்று வழங்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சான்றிதழ் அடிப்படையில் காலஞ்சென்ற அரசு ஊழியரின் வாரிசுதாரரான திரு.N.முத்துகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் தட்டச்சர் பணி நியமனம் வழங்கலாமென முடிவெடுக்கப்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் திரு.N.முத்துகுமார் என்பவருக்கு 26.03.2018 அன்று தட்டச்சர் பணி நியமனம் வழங்கப்பட்டது என்றும், திரு.N.முத்துகுமார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் 09.04.2018 முற்பகல் முதல் தட்டச்சராகப் பணிபுரிந்து

(த.பி.பா)

வருகின்ற நிலையில், அவரது பணியினை பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்யுமாறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கக இயக்குநரின் கருத்துருவை கருணை அடிப்படையிலான பணி நியமனம் தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள சட்டம் / விதிகள் / அரசாணைகளின்படி அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், பணிநாடுநர் கருணையடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் அளித்த நாளான 17.09.2014-க்குப் பின்னர் தட்டச்சு தொழில்நுட்பக் கல்வி முடித்துள்ளதால் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.-1) துறை, நாள் 23.01.2020-ற்கு தனியர் பொருட்டு விலக்களித்தும் தனியர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும் திரு.N.முத்துகுமார், தட்டச்சர் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 09.04.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியருக்கான ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, முறையே தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.-2) துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (G) துறை ஆகியவற்றின் அலுவல் சார்பற்ற எண்.18813/க்யூ.-2/2020-1, நாள் 09.12.2020 மற்றும் அலுவல் சார்பற்ற எண்.32981/G-2/2020-1, நாள் 09.12.2020-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர் சஹாய் மீனா
அரசு செயலாளர் (பயிற்சி)

பெறுநர்

இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், ஆலந்தூர், சென்னை-600 016.
திரு.N.முத்துகுமார், தட்டச்சர்,
(ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், ஆலந்தூர்,
சென்னை-600 016. வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-600 018/600 035.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 009/600 035.

நகல்:

அரசு செயலாளரின் தனிச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்த (பயிற்சி) துறை, சென்னை-600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.-2) துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (நி.சீ-II) துறை, சென்னை-600 009. (3 நகல்கள்)
இருப்புக் கோப்பு உதிரி / நகல்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

16/12/2020
பிரிவு அலுவலர்
16/12/2020